**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No. 220/2023**

**PW - 1**

| | | |
|---|---|---|
| Name | : | பாபு ( LW. 6) |
| Father's / Husband Name | : | த/பெ.ஷாஜகான் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **25.02.2025** என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு. துரைகருணாநிதி, உதவியாளர்.

**(1, 2 எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

**(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம். :– மதியம் 02.53 மணி )**

**முதல் விசாரணை:–**

1) நான் நாமக்கல் மாவட்டம் எஸ்.கே.நகரில் குடியிருந்து நான் பீரோ செய்யும் பட்டறையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 28.05.2022 ம் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் திருச்சி ரோடு எஸ்.கே நகர் அப்பார்மெண்டின் முன்புறமாக இருக்கர வாகனம் திருடு போனது சம்மந்தமாக நாமக்கல் போலிசார் சம்பவயிடம் வந்து பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், மணிக்கண்டன் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) நான் எதற்காக கையொப்பம் செய்தேன் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் போலிசார் சாட்சியாக இருக்க சொல்லி என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். போலிசார் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் காவல் நிலையத்தில் வைத்து நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல, அந்த இடத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியியுள்ளது என்ற விவரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால்

அன்றைய தினம் 05.00 மணிக்கு விசாரித்தார்கள். அதன் பின்னர் போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை.

**மறு விசாரணை – இல்லை.**

**விசாரணை முடிவுற்ற நேரம்:– மதியம் 02.59 மணி**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையொப்பம் செய்தார்.

C NANDHINI
Digitally signed by C NANDHINI
Date: 2025.02.25 19:36:05 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.